

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு மதுராந்தகம் தெற்கு ஒன்றியத் திற்குட்பட்ட தச்சூர் ஊராட்சியில் திராவிட கழக பேச்சாளர் சே.மெ.மதிவதனி அவர்கள் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தா மனை ஆதரித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித் தார். அருகில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன் னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மதுராந்தகம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்.சிவகுமார், மாவட்ட பொரு ளாளர் வெ.விசுவநாதன், தாம்ப ரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகு மாரி, பகுதிச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், ஒன்றியச் செயலாளர்கள் எல்.இதயவர்மன், பையனூர் சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் 2026, கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து கருங்குழி பேரூராட்சிக்குட்பட்ட பாகங்களில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பகுதி கழகச் செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, பொன் விஜயன், மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட மற்றும் கருங்குழி பேரூர் நிர்வாகிகள் உள்ளனர்.

சூழ்ச்சிக்காரர்களிடமிருந்து தமிழ்நாட்டை மீட்டெடுப்போம்!

மதுராந்தகம் தொகுதியில் மாபெரும் வெற்றியை ஈட்டிடுவோம்!

நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் வேண்டுகோள்!

சென்னை, அக்.4

திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக நடத்திய தலைவர் முத் துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை எடுத்துக் கூறி தீய மற்றும் திருட்டு சக்தியாக செயல்படும் சூழ்ச்சிக்காரர்களிடமி ருந்து தமிழ்நாட்டை மீட்டெடுக்க மதுராந்த கம் தொகுதி இடைத் தேர்தலில் மாபெரும் வெற்றியை பெற்றிடு வோம் என நமது திரா விட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவி யம் விடுத்துள்ள அறிக் கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நமது திராவிட இயக் கத்தின் சார்பாக மது ராந்தகத்தில் திராவிட



முன்னேற்றக் கழக திரா விட நாயகர், தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளம் படை தளபதி உதயநிதி இவர்களிடம் வாழ்த்துப் பெற்ற வேட் பாளர் வழக்கறிஞர் பரந்தாமனை ஆதரித்து நடைபெறும் மதுராந்த கம் பிரச்சாரத்தில் அனைத்துத் தரப்பு மக் கள் மனதை ஈர்த் துள்ளது.

தமிழகத்தின் தலைவ னாய் போராட்டக் களத்தின் போர்வா ளாய் திராவிட மண் ணின் சூரியனாய் தமிழ கத்தின் தலைமகனாய், ஆசிய கண்டத்தின் தவிர்க்க முடியாத மிகப் பெரிய அரசியல் ஆளுமை, இந்தியாவில் முதல்வர்களுக்கெல் லாம் முதல்வர், தமிழ் நாட்டை உலக அரங் கிற்கு வளர்த்தெடுத்த மாபெரும் தலைவர், ஐ.நா. சபை மற்றும் இந் திய ரிசர்வ் வங்கியே பாராட்டிய எங்கள் தலைவர், மக்கள் உணர் வுகளை புரிந்து கொண்டு சிறப்பான ஆட்சியை தந்த தலை வர் அதை யாரும் மறக்க முடியாது.

உரிமைகளை காப் போம், தமிழகத்தை மீட்டெடுப்போம் என்ற தலைவரின் சொல்லை பின்பற்றி இடைத் தேர்தலில் அமோக வெற்றி பெறு வோம். தன்னிச்சையாக வந்த மக்கள் கூட்டம் பகுத்தறிவை பயன்ப டுத்துவதில் இல்லை என்று முடிவு செய்த பிறகு மனிதனிடம் வாதிடுவது என்பது செத்துப்போன மனித னுக்கு மருந்து ஊட்டுவ தற்கு நிகராகும் என்ற பேரறிஞர் அண்ணா வின் சொல்லை இன்று நினைவு கூர்கிறோம்.

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல் லும் என்ற பாரதியாரின் சொல்லுக்கு ஏற்ப தலை வர் முத்துவேல் கருணா நிதி ஸ்டாலினிடம் தேர் தல் வெற்றி யை சமர்ப்பித்து நாட்டை தீய திருட்டு சக்தியிடம் இருந்து மீட்டெடுப் போம். வாழ்க தளபதி.

இவ்வாறு திருமதி ஓவியம் விடுத்துள்ள அ றி க் கை யி ல் குறிப்பிட்டுள்ளார்.




மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 151 பாகத்தில் உள்ள புது காலனி பகுதியில் மாநில மீனவரணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் வீடு வீடாக பொதுமக்களை சந்தித்து கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களுக்கு ஆதரவாக வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். ஒரத்தூர் கிளை கழக செயலாளர்கள் வெங்கடேசன், காசிநாதன், பெருமாள், திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள் கே.பி.சொக்கலிங்கம், இரா. சந்தர், ஏகா.கார்த்திக்கேயன், எம்.எல்.சரவணன், மாவட்ட பிரதிநிதிகள் கே. கார்த்திகேயன், எஸ். மகேந்திரன், இ.ரமேஷ், பாண்டியன், கே.சந்தோஷ் குமார், எஸ்.செல்வம், டி.மகேந்திரன், அல்லிமுத்து, ஆர்.ரமேஷ், இரா.பிரகேஷ், எம்.கார்த்திக், ப்ரெட் சுரேஷ், கணேசன், தயாளன், ராஜவேல், சங்கர், சுகுந்தா, ராதா, வாசுகி, மீனா, சுகந்தி மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.கே.எஸ்.வாசன்

அக்டோபர் 3 (2013)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் வார்டு கிளைச் செயலாளர், நகர அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர வீடு கட்டும் சங்கத்தில் துணைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

இந்தித் திணிப்பில்

'U Turn' அடிக்கும் த.வெ.க. அரசு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக் 4-

"இந்தித் திணிப்பில் 'U Turn' அடிக்கும் த.வெ.க. அரசு" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப் பதாவது:-


இதுவரை ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பைத் தான் தமிழ்நாடு எதிர்கொண்டு வந்தது.

தற்போது, மாநில அரசே அந்தப் பணியைச் செய்வதுதான் அவர்கள் சொன்ன மாற்றம் போல.

எல்லாவற்றிலும், ஆழம் பார்த்துவிட்டு, எதிர்ப்பு கிளம்பியதும் 'U Turn' அடிக்கும் த.வெ.க. அரசின் மற்றுமொரு முயற்சியா இது?

வடமாநில influencerகளுக்காக ரீல்ஸ் ஆட்சி நடத் தும் த.வெ.க. அரசு இதன் ஆபத்தை உணர்ந்து, உடனடியாகத் தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கிறேன்.

இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாட்டின்



உயிர்க்கொள்கை. அதில் விளையாட வேண்டாம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள் ளார்.

இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு - வல்லரசு பார்வர்டு பிளாக் ஆதரவு!

பி.என்.அம்மாவாசி அறிவிப்பு!



மதுரை, அக். 4-

மதுரையில் 30.09.2026 அன்று நியூ ராஜா ரெஸ்ட் ஹவுஸில், அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவ னர் தலைவர் பி.என்.அம் மாவாசி தலைமையில் 'மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாநில பொதுச்செயலா ளர் பா.சந்திரசேகரன் தீர் மானங் களை வாசித் தார். மதுரை மாநகர் மாவட்ட தலைவர் பால முருகன் வரவேற்றார். மாநில செயற்குழு மற் றும் பொதுக்குழு உறுப்பி னர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த னர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங் கள் வருமாறு:-

1.தமிழ்நாட்டில் நடை பெறும் மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்த லில் தி.மு.க.வெற்றி பெற வல்லரசு பார்வர்டு பிளாக் ஆதரவு தெரிவித்து தீர் மானம் நிறைவேற்றப் பட்டது.

2. தேசிய தலைவர் பசும்பொன் முத்துராம லிங்க தேவர் ஜெயந்தி விழாவை இந்த ஆண்டு மிக பிரமாண்டமாக நடத்த வல்லரசு பார் வர்டு பிளாக் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. தென் மாவட்டங் களின் மையப் பகுதியாக அமையப் பெற்ற மதுரை அருகே அமைந்துள்ள செக்காணூரணியில் புதி யதாக கட்டப்பட்ட பேருந்து நிலையத்திற்கு கல்வி காவலர் பி.ஆர். மூக்கையா தேவர் பெயர் சூட்ட வேண்டும் என தமிழ்நாடு அரசை வல்ல ரசு பார்வர்டு பிளாக் கேட்டுக் கொள்கிறது.

4. உசிலம்பட்டியில் அக்டோபர் 21ல் போர் முரசு வல்லரசு நினைவு நாளை சிறப்பாக கொண் டாட வேண்டுமென தீர் மானம் நிறைவேற்றப் பட்டது.

5. உசிலம்பட்டி 58 கிராம கால்வாய் திட்டத் திற்கு வல்லரசு பொய் சூடப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறோம். சாமி, செக்காணூரணி இவ்வாறு தீர்மானங் க ள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலக்குழு உறுப்பினர்கள் கவிஞர் காஞ்சி பரமன், டாக்டர். தங்கப்பாண்டி, செல்லச் ரவி, ஏ.மணி கண்டன், மதுரை கனகு, மற்றும் பலர் கலந்து கொண்ட னர் என்று அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் தலைவர் பி.என். அம்மாவாசி தெரிவித் துள்ளார்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புக்கத்துறை ஊராட்சியில் பாகம் 15-இல் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் அறிவுறுத்தலின்படி 36 வது மாமன்ற உறுப்பினர் வட்டக் கழக செயலாளர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, 46 (அ) வட்ட செயலாளர் எஸ்.ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.



கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் தொகுதி பூக்கத்துறை தொகுதியில் வாக்காளர்களை சந்தித்து வட்டச் செயலாளர் முரசொலி ஜீ.மாரிமுத்து தலைமையில், வட்டச் செயலாளர் கி.தினகரன், மாவட்ட அமைப்பாளர் கூல் பாயிண்ட் பிரகாஷ், பகுதி அமைப்பாளர் வெள்ளைச்சாமி, வட்ட துணைச் செயலாளர் சோமசுந்தரம், கர்ணா, கே.பி.முரளிதரன், பிரவீன் குமார் மற்றும் கிளை செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பொது மக்களிடம் வாக்கு சேகரித்தனர்.